JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//734/2025 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | வசந்தமல்லிகா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 20.01.2026.

**முதல் விசாரணை**

**நான் தற்போது வீரசிகாமணியில் குடியிருந்து வருகிறேன். நான் முனிசிபல் ஆபிசில் உதவியாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் கணவரின் தாய்மாமாவின் மகன். அசா.1 என் கணவர். சாட்சிகள் மாடசாமி, அண்ணாமலை ஆகியோர்களை தெரியும். கடந்த 10.09.2025 ம் தேதி நான் என் தென்காசியில் உள்ள என் அம்மா வீட்டிற்கு சென்று விட்டேன். என் கணவர் அலுவலகத்திற்கு சென்று விட்டார் நான் என் அம்மா வீட்டிற்கு சென்று விட்டு மதியம் 3.20 மணியளவில் வீட்டிற்கு வந்தேன் வீட்டிற்கு வந்து பார்த்த போது கதவை சாத்தி விட்டு ஆஜர் எதிரி வீட்டிற்குள் இருந்து வெளியே வந்தார். நான் ஆஜர் எதிரியிடம் எதற்காக உடனே கிளம்புகிறீர்கள் என கேட்டேன். அதற்கு ஆஜர் எதிரி அத்தைஇல்லாததால் நான் கிளம்புகிறேன் என்று பதட்டமாக கூறினார். நான் வீட்டிற்குள் சென்று பார்த்த போது சாவியை வைத்திருந்த இடத்தில் சாவி இல்லாமல் டிவி ஸ்டாண்டிற்கு அருகே இருந்தது. எல்லா கதவுகளும் சும்மா சாத்தி இருந்தது. பின்னர் எனக்கு சந்தேகம் வந்து பெட்ரூம் கதவை திறந்து பார்த்த போது பெட்ரூமில் பீரோவில் நகைகள் வைக்கும் இடத்தில் பார்த்த போது நகைகள் காணாமல்**

போய் இருந்தது. 50 கிஎடையுள்ள தங்க ஆரம், 30 கி எடையுள்ள தங்கநெக்லஸ், 42 கி எடையுள்ள 4 வளையல்கள், 8 கி எடையுள்ள கம்மல், 6 கி எடையுள்ள கம்மல், 4 கி எடையுள்ள மோதிரம், 3 கி எடையுள்ள மோதிரங்கள் இரண்டு காணாமல் போயிருந்தது உடனே நான் என் கணவருக்கு போன் செய்து தகவல் சொல்லி விட்டேன். பின்னர் ஆஜர் எதிரி மீது சந்தேகம் வந்தது. ஆஜர் எதிரி எங்கள் உறவினர் என்பதால் நாங்கள் விசாரித்து பார்த்தோம். அவரை பற்றி தகவல் இல்லாததால் காவல்நிலையம் சென்று என் கணவர் புகார் கொடுத்தார். பின்னர் 12,13 ம் தேதி வெள்ளிக்கிழமையன்று காவல்நிலையத்திலிருந்து எதிரியை கண்டுபிடித்து விட்டதாகவும் நகைகள் கிடைத்து விட்டதாகவும் தகவல் சொன்னார்கள். நானும், என் கணவரும் காவல்நிலையம் சென்று திருடு போன என் நகைகளை அடையாளம் காண்பித்தேன். போலிஸார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் இலவச சட்ட வழக்கறிஞர் இன்று நியமனம் செய்யப்பட்டதால் மேற்படி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//734/2025 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | கல்யாணசுந்தரம் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 20.01.2026.

**முதல் விசாரணை**

**நான் தற்போது வீரசிகாமணியில் குடியிருந்து வருகிறேன். நான் திருநெல்வேலி கூடுதல் மகளிர் நீதிமன்றத்தில் சுருக்கெழுத்தராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் தாய்மாமாவின் மகன். சாட்சிகள் வசந்தமல்லிகா, மாடசாமி, அண்ணாமலை ஆகியோர்களை தெரியும். கடந்த 10.09.2025ம் தேதி நான் காலை 7.20 மணியளவில் வீரசிகாமணியில் உள்ள என்னுடைய வீட்டிலிருந்து வேலைக்காக கிளம்பி விட்டேன். வீட்டில் என் அம்மா இல்லை. என் அம்மா என் அக்கா ஊரில் இருந்தார்கள். என் மனைவி தென்காசிக்கு அவரது அம்மா வீட்டிற்கு சென்று விட்டார். நான் என்னுடைய வீட்டில் பெட்ரூம் கதவை பூட்டி விட்டு முன் கதவையும் பூட்டி விட்டு வெளியே சாமி போட்டோவிற்கு அருகில் சாவியை வைத்து விட்டு வேலைக்கு சென்று விட்டேன். தலைவாசல் கதவை பூட்டாமல் அடைத்து வைத்து விட்டு சென்று விட்டேன். பின்னர் என் மனைவி மதியம் 3.20 மணியளவில் வீட்டிற்கு வரும் போது என் மாமா பையன் ஆஜர் எதிரி வீட்டிற்கு வெளியே தோளில் பேக்கை மாட்டி கொண்டு எதிர்த்தார் போல் சென்றுள்ளார். உடனே என் மனைவி எதற்காக வந்த உடன் செல்கிறீர்கள்**

என்று ஆஜர் எதிரியிடம் கேட்டதற்கு அத்தை இல்லாததால் கிளம்பி விட்டேன் என ஆஜர் எதிரி என் மனைவியிடம் கூறி உள்ளார். என் மனைவி வீட்டிற்குள் சென்று சாமி போட்டோ அருகில் உள்ள சாவியை சென்று பார்த்த போதுசாவி அந்த இடத்தில் இல்லாமல் டிவி ஸ்டாண்டிற்கு அருகே இருந்துள்ளது. சந்தேகத்தின் பேரில் என் மனைவி முன்பக்க கதவையும் பெட்ரூம் கதவையும் திறந்து பார்த்த போது பெட்ரூமில் உள்ள பீரோவில் வைத்திருந்த சுமார் 50 கிராம் எடையுள்ள தங்க கவர்னர்மாலை, 30 கிராம் எடையுள்ள தங்க நெக்லஸ், 42 கி எடையுள்ள தங்க வளையல்கள் 4, 8 கி எடையுள்ள ஒரு ஜோடி கம்மல், 6 கி எடையுள்ள 1 ஜோடி கம்மல், 4 கி எடையுள்ள 1 மோதிரம், 3 கி எடையுள்ள தங்க மோதிரம் 2 இவைகள் காணாமல் போய் விட்டன. பின்னர் என் மனைவி வெளியே வந்து விசாரித்த போது எங்கள் வீட்டிற்கு எதிர்த்தால் வீட்டில் உள்ள மாடசாமி என்பரிடம் கேட்ட போது அவர் ஆஜர் எதிரி தான் எங்கள் வீட்டிற்குள் இருந்து வெளியே சென்றதாக கூறி உள்ளார். உடனே என் மனைவி எனக்கு போன் செய்து தகவல் சொன்னார். ஏற்கனவே ஆஜர் எதிரி மேல் அடிதடி மற்றும் திருட்டு வழக்குகள் உள்ளது. அதனால் ஆஜர் எதிரி செய்ய வாய்ப்பு உள்ளது, வந்த பின்பு பார்த்து கொள்ளலாம் என்று என் மனைவியிடம் சொல்லி விட்டேன். பின்னர் இரவு ஊருக்கு வந்து விட்டு சேர்ந்தமரத்திற்கு சென்று என் உறவினர்களிடம் ஆஜர் எதிரியை பற்றி விசாரித்தேன். ஆஜர் எதிரி அப்பொழுது ஊரில் இல்லை. உடனே 11.09.2025 ம் தேதி நானும், என் மனைவியும் சேர்ந்து சேர்ந்தமரம் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் இருக்கும் கையெழுத்து என்னுடையது தான். மேற்படி புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 2 நாட்கள் கழித்து 13 ம் தேதி காவல்நிலையத்திலிருந்து எதிரியை கைது செய்து விட்டதாகவும் நகைகள் எல்லாம் கிடைத்து விட்டதாகவும் தகவல் சொன்னார்கள். பின்னர் நானும், என் மனைவியும் சேர்ந்தமரம் காவல்நிலையம் சென்று நகைகளை அடையாளம் காண்பித்தோம். பின்னர் நீதிமன்றத்தில் இடைக்காலமாக மனு தாக்கல் செய்து நகைகளை பெற்று கொண்டோம். நகைகளை பாதுகாப்பிற்காக வங்கியில் வைத்து உள்ளோம். இன்றையதினம் நகைகளை கொண்டு வரவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படம் புகைப்படங்களில் உள்ள நகைகளை தான் நீதிமன்றத்திலிருந்து நான் திரும்ப பெற்றுக்கொண்டது. மேற்படி புகைப்படங்கள் எண்ணம் 5 அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிஸார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் இலவச சட்ட வழக்கறிஞர் இன்று நியமனம் செய்யப்பட்டதால் மேற்படி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi